OS.No. 102/2021

Date : 07.04.2026

Witness Name & Rank - ரங்கசாமி - PW1

**சாட்சி அழைக்கப்பட்டு 1 மற்றும் 2 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டது**

1. பிரமாண வாக்குமூலத்தில்உள்ள சங்கதிகளை படித்து பார்த்தேனா என்றால் இல்லை, எனக்கு படிப்பறிவு இல்லை. அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியாது என்றால் சரிதான். தாவா சொத்து எனக்கு சுயரார்ஜித வகையில் பாத்தியப்பட்ட சொத்து என்றால் சரிதான். வழக்கு சொத்தில் கட்டிடம் வீடு எதுவும் இல்லை என்றால் சரியல்ல, ஒரு செட் அமைக்கப்பட்டுள்ளது. அவ்வாறு வழக்கு சொத்தில் ஒரு செட் அமைக்கப்பட்டுள்ளதாக பிராது, முதல் விசாரணையில் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது வீடு மலைக்கோவில் மேட்டுபாளையத்தில் உள்ளது என்றால் சரிதான். ஆனால் எனது முதல் விசாரணையில் நான் கதவு எண். 1/46, முனியப்பன் கோவில் வீதி, மேட்டுபாளையத்தில் வசிப்பதாக குறிப்பிட்டு சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.
2. மேற்படி சங்கதி தவறு என்றால் சரியல்ல, அந்த வீடு எனது தந்தையின் முகவரி ஆகும். நான் 1ம் பிரதிவாதிக்கு பொது அதிகாரம் செய்து கொடுத்த போது வழக்கு சொத்து காலி பூமி என்றால் சரியல்ல, நான் பொது அதிகாரம் கொடுக்கவில்லை கடன் தான் வாங்கியிருந்தேன். பொதுவாக கடன் வாங்குவதற்கு பொது அதிகாரம் எழுதித்தர வேண்டி அவசியம் இல்லை என்றால் சரிதான். மேற்படி செட் உள்ளதாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு முறையான வரி ரசீது மின் இணைப்பு இல்லை என்றால் சரிதான். நான் எனது பிரமாண வாக்குமூலம் பத்தி 3 ல் 1ம் பிரதிவாதி கந்து வட்டி தொழில் செய்வதாக சொல்லியுள்ள நிலையில் அதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி பெயரில் நிறையசொத்துக்கள் உள்ளது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி நில வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான்.
3. 1ம் பிரதிவாதிக்கு எதிராக யாரேனும் காவல் நிலையத்தில் கந்து வட்டி தொழில செய்வதாக புகார் கொடுத்துள்ளார்களா என்றால் இல்லை, ஆனால்

முதலமைச்சரிடம் மனு கொடுத்தாக கேள்விபட்டேன். நான் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் 1ம் பிரதிவாதி 4 தறிகள் வாங்கி கொடுத்தாக சொல்லியுள்ள நிலையில் அதற்கு ஆவணம் எதுவும் உள்ளதா என்றால் இல்லை. 1ம் பிரதிவாதிக்கு தறி தொழில் இல்லை என்றால் சரிதான். நான் பிரமாண வாக்குமூலம் பத்தி 4ல் 1ம் பிரதிவாதி அடமானம் எழுதித்தருமாறும் நான் கடனை கட்டி முடித்த பிறகு அடமான பத்திரத்தை ரத்து செய்து தருவதாக அவர் உறுதி அளித்ததாக சொல்லியுள்ளேன் என்றால் அது தவறு, நான் அவ்வாறு சொல்லவில்லை. நான் பத்தி 6ல் முழு கடனையும் செலுத்திய பிறகு பொது அதிகார பத்திரத்தை ரத்து செய்து தருமாறு கேட்டுக்கொண்டதாக சொல்லியுள்ளேன் என்றால் அவ்வாறு நான் சொல்லவில்லை. நான் வட்டி செலுத்தி வந்ததாக சொல்லியுள்ள நிலையில் அதை காட்ட என்னிடம் ஆவணம் உள்ளதா என்றால் இல்லை. அதை போல எவ்வளவு வட்டி எவ்வகையில் செலுத்தி வந்தேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அதே போல் எந்த தேதியில் முழு கடனை செலுத்தினேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். நான் அவ்வாறு கடனை திருப்பி செலுத்தியதாக சொல்லியுள்ள நிலையில் அசல் பத்திரத்தை மீட்கவும் ஆவணங்களை ரத்து செய்யவும் சட்ட நடிவக்கை எதுவும் எடுக்கவில்லை என்றால் சரிதான்.

4. அதே போல் 14.12.2011ம் தேதி பொது அதிகார பத்திரம் எழுதியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு பொது அதிகார பத்திரம் அன்றைய தினமே தெரியும் என்றால் 8 ஆண்டுகளுக்கு எனக்கு தெரியாது, நான் வில்லங்க சான்றின் மூலம் தான் தெரிந்துகொண்டேன். நான் சொல்வது தவறு என்றும் பொதுவாக வில்லங்க சான்றில் பொது அதிகார பத்திரம் தொடர்பான பதிவுகள் எதுவும் இருக்காது எனவே நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் பொது அதிகாரம் எழுதிக்கொடுத்த தினத்திலேயே 1ம் பிரதிவாதி 2ம் பிரதிவாதிக்கு கிரைய ஒப்பந்தம் எழுதிய விவரம் எனக்கு தெரியும் என்றால் இல்லை. நான் சொல்வது தவறு என்றும் எனக்கு அன்றைய தினமே கிரைய ஒப்பந்தம் தெரியும் என்றால் சரியல்ல. நான் 1 மற்றும் 2 ம் பிரதிவாதிகளுக்கு எதிராக சாதி வன்கொடுமை புகார் கொடுத்து அது திருப்பூர் மாண்புமிகு SC/ST சிறப்பு நீதிமன்றத்தால்

விடுதலை செய்யப்பட்டார்கள் என்றால் அந்த விவரம் எனக்கு தெரியாது. இந்த புகார் கொடுத்த பிறகு தான் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

5. வழக்கு சொத்து 20 லட்சம் என காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் அவர்களது அமைதியான சுவாதீனத்தை கேடுப்பதாக எனக்கு எதிராக மங்கலம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் சரிதான். அதன் பிறகு தான் சாதி வன்கொடுமை புகாரும் இந்த வழக்கும் தாக்கல் செய்தேன் என்றால் சரிதான். நான் வழக்கு சொத்தின் சுவாதீனத்தில்உள்ளதை காட்ட எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் அரசு வழிகாட்டி மதிப்பு எவ்வளவு என்றால் தெரியாது. எனக்கு 2 ம் பிரதிவாதிக்கு 26.12.2016 ம் தேதி கிரையம் கொடுத்த விவரம் நன்கு தெரியும் இருந்தும் வழககிற்காக 22.07.2021 ம் தேதி தான் விவரங்கள் தெரிய வந்ததாக தவறாக முன் நிறுத்தி வழக்காடி வருகிறேன் எனது வழக்கு காலவரை சட்டத்தின் கீழ் பாதிப்புக்குள்ளாகியுள்ளது அதே போல் முறையாக பொது அதிகாரம் எழுதி 1ம் பிரதிவாதியால் 2ம் பிரதிவாதிக்கு உரிய மறுபயன் பெயரில் கிரையம் எழுதிப்பட்டு 2ம் பிரதிவாதி கிரைய தினத்தில் இருந்து வழக்கு சொத்தில் சுவாதீனத்தில் உள்ளதால் எனது வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதிகள் எந்த தொந்தரவும் எனக்கு செய்யவில்லை என்றால் சரியல்ல. எனது வழக்கு செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.

---

சாட்சி கூறிய படி என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணிணியில் தட்டச்சிடப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது

(Sd/−)K.Yuvaraj,B.A.,B.L.,
சார்பு நீதிபதி, பல்லடம்.

---